## IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.

## OS. No. 79/2022

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
| NAME | ரத்தினம் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 02.02.2026.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. வழக்கில் காணாமல் போனதாக சொல்லும் சம்பத் எனது தம்பி. உறவினர் என்ற காரணத்தினால் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் அதனால் மட்டுமல்ல தம்பி பிள்ளைகள் என்பதால். சம்பத் மனநிலை சரியில்லாதவர் என்றால் எப்போதாவது ஒருநாள் சரியில்லாமல் போகும் மற்ற நேரத்தில் நன்றாக இருப்பார். அவர் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார் என தெரியுமா என்றால் தெரியாது.

2. பிரமாண வாக்குமூலத்தில் நானும் சிகிச்சைக்கு அழைத்துசென்று சிகிச்சை அளிப்பதாக சொல்லியுள்ளதுபோல் சென்றதில்லை என்றால் சரிதான். அவர் 2005-ல் காணாமல் போய்விட்டார். அதுகுறித்து பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள். அவர்களில் பெரிய மகள் சித்ராவிற்கு மனநிலை சரியில்லை. கோமதி சிறிய மகள்.

3. கோமதி மதம் மாறிவிட்டாரா என்றால் இல்லை முஸ்லிமை திருமணம் செய்துகொண்டார். சம்பத்தின் மனைவி தெரியுமா என்றால் ராணி அவர் 2013-ல் இறந்துவிட்டார். சம்பத்தின் அப்பா பெயர் கண்ணன், அம்மா பெயர் முனியம்மாள். 1979-ல் அப்பாவும், 2014-ல் அம்மாவும் இறந்துவிட்டார்கள். சம்பத் மனநிலை சரியில்லாததால் எங்கோ சென்றுவிட்டார் என்றாலும் அதனால் அவர் காணவில்லை என தீர்மானிக்க முடியாது என்றால் ரொம்ப நாட்களாக அவரை காணவில்லை. காணவில்லை என காவல்நிலையத்தில் புகாரோ அல்லது பேப்பரில் விளம்பரமோ கொடுத்தோமா என்றால் இல்லை. வாதிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரமாண வாக்குமூலத்தில்

சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யான சங்கதிகள் என்றாலும் அதனால் எனது பிரமாண வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.